**Puducherry / Regional Bulletin / Tamil /18.10hrs / 06.05.2026 / Script**

**வணக்கம்**

**ஆகாஷ்வாணி-புதுச்சேரி**

**மாநிலச் செய்திகள்**

**வாசிப்பவர் : சரவணகுமார்**

**தேதி : 06.05.2026 – புதன்கிழமை** **நேரம் : மாலை 6.10 மணி**

---

***தலைப்புச் செய்திகள்***

பிரதமர் திரு. நரேந்திர மோடி, வியட்நாம் அதிபர் திரு. டோ லாமுடன் பேச்சுவார்த்தை நடத்தினார். அப்போது பல்வேறு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின.

உச்சநீதிமன்ற நீதிபதிகளின் எண்ணிக்கையை உயர்த்த மத்திய அமைச்சரவை மேற்கொண்ட முடிவானது, நீதித்துறையின் கட்டமைப்பை வலுப்படுத்தி இருப்பதாக, பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

தமிழகத்தில் புதிய அரசு அமைப்பதற்காக தவெக தலைவர் திரு. விஜய், ஆளுநர் திரு. R.V. அர்லேகரை சந்தித்து உரிமை கோரினார்.

புதுச்சேரியில், சிவப்பு அட்டைதாரர்கள் டிஜிட்டல் கரன்சியை பெறுவதற்கு E-Kyc-யை புதுப்பிக்க வேண்டியது அவசியம் என்று, குடிமைப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் விவகாரங்கள் துறை தெரிவித்துள்ளது.

*மோடி பேச்சுவார்த்தை (15)*

பிரதமர் திரு. நரேந்திர மோடி, இன்று, வியட்நாம் அதிபர் திரு. டோ லாமுடன் பேச்சுவார்த்தை நடத்தினார். புதுடெல்லியில் நடைபெற்ற இந்தப் பேச்சுவார்த்தையில், இருதரப்பு உறவுகள், பொருளாதார மற்றும் வர்த்தக ஒத்துழைப்பு குறித்து, இரு தலைவர்களும் ஆலோசித்தனர்.

அதனைத் தொடர்ந்து, டிஜிட்டல் தொழில்நுட்பம், அரியவகை கனிமங்கள், மருத்துவம், டிஜிட்டல் பணப் பரிவர்த்தனை, கலாச்சாரம் மற்றும் சுற்றுலா ஆகிய துறைகளில், இந்தியா மற்றும் வியட்நாமிற்கு இடையே புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின.

வியட்நாம் அதிபராக தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு மாதத்திற்குள், திரு. டோ லாம் மேற்கொண்ட முதல் இந்திய அரசுமுறைப் பயணம் இதுவாகும். இது குறித்து கருத்து தெரிவித்துள்ள பிரதமர் திரு. நரேந்திர மோடி, இரு நாடுகளுக்கும் இடையேயான நட்புறவிற்கு திரு. டோ லாம் அளிக்கும் முன்னுரிமையை இது எடுத்துக் காட்டுவதாக உள்ளது என்று தெரிவித்துள்ளார்.

முன்னதாக, வியட்நாம் அதிபர் திரு. டோ லாமுக்கு குடியரசுத் தலைவர் மாளிகையில், பாரம்பரிய முறைப்படி வரவேற்பு அளிக்கப்பட்டது.

*உச்சநீதிமன்றம் (19)*

உச்சநீதிமன்ற நீதிபதிகளின் எண்ணிக்கையை உயர்த்த மத்திய அமைச்சரவை மேற்கொண்டுள்ள முடிவு, நீதித்துறையின் கட்டமைப்பை வலுப்படுத்தி இருப்பதாக, பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார். உச்சநீதிமன்றத்தில் கூடுதலாக 4 நீதிபதிகளை நியமனம் செய்ய பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையில் நேற்று நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டது. இதனையடுத்து, உச்சநீதிமன்ற நீதிபதிகளின் எண்ணிக்கை 33-லிருந்து, 37ஆக உயர்கிறது. இது குறித்து பிரதமர் வெளியிட்டுள்ள சமூக ஊடகப் பதிவில், மக்களுக்கு விரைந்து நீதி கிடைப்பதற்கான வாய்ப்பை அரசு உருவாக்கி உள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

மத்திய பிரதேசம், ராஜஸ்தான், உத்தர பிரதேசம், கர்நாடகா, ஆந்திரா, தெலங்கானா போன்ற மாநிலங்களில் உள்ள 19 மாவட்டங்களில் மேற்கொள்ளப்படும் அதிக ரயில்வே பாதைகளுக்கான திட்டங்கள், போக்குவரத்து கட்டமைப்பை மேலும் வலுப்படுத்தும் என்றும் பிரதமர் தெரிவித்துள்ளார். 23 ஆயிரத்து 437 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும் இந்தத் திட்டம், 6 முக்கிய நகரங்களை இணைக்கும் வகையில் செயல்படுத்தப்பட உள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார். இதன் மூலம் நாட்டின் பொருளாதார கட்டமைப்பு மேலும் வலுப்பெற்று துரிதமான வளர்ச்சிக்கு உதவிடும் என்றும், சுற்றுலாத் துறைக்கு உத்வேகம் அளிக்கும் என்றும் பிரதமர் சமூக ஊடகப்பதிவில் தெரிவித்துள்ளார்.

***மின்சார வாகனம் -1 (4)***

மின்சார வாகன பயன்பாட்டிற்கான பேட்டரியை மறு சுழற்சி செய்வதற்கான திறன் மேம்பாடு குறித்து, இந்தியாவும் – ஐரோப்பிய ஒன்றியமும், 169 கோடி ரூபாய் மதிப்பீட்டில், ஒரு கூட்டு முயற்சியை தொடங்கி உள்ளன. இது குறித்த ஒரு செய்தித் தொகுப்பு...

***மின்சார வாகனம் -2 (14)***

மத்திய அரசின் அறிவியல் ஆலோசகரான பேராசிரியர் அஜய்குமார் சூட் கருத்து தெரிவிக்கையில், இந்திய ஐரோப்பிய ஒன்றியத்தின் மின்சார வாகன பேட்டரியின் மறு சுழற்சி திறனை மேம்படுத்துவதற்கான இந்த கூட்டு முயற்சி ஒரு திருப்புமுனையான தருணம் என்று தெரிவித்துள்ளார். இந்தியாவில் மின்சார வாகன சந்தை தொடர்ந்து வேகமாக முன்னேறி வரும் சூழலில், அது தொடர்பான பாதுகாப்பு மற்றும் சுற்றுச்சூழல் உறுதிபாடுகளுக்கு ஒரு வலுவான உள்நாட்டு மறுசுழற்சி சூழல் அமைப்பை உருவாக்க வேண்டியது காலத்தின் கட்டாயம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தியாவிற்கான ஐரோப்பிய ஒன்றியத்தின் தூதர் திரு. ஹெர்வே டெல்பின் கூறுகையில், காற்று மாசுபாட்டை வெகுவாக குறைப்பதில் மின்கலன்கள் முக்கிய பங்காற்றுவதாகத் தெரிவித்தார். இந்த கூட்டு முயற்சியின் மூலம், சோதனைக் கட்டத்தில் உள்ள மேம்பட்ட

மின்கலன்களை மக்களின் பயன்பாட்டிற்கு விரைவாக கொண்டு வர முடியும் என்றும் தெரிவித்தார்.

***மேற்கு வங்கம் (13)***

மேற்கு வங்க மாநிலத்தில் தேர்தலுக்கு பிந்தைய வன்முறைகளை கட்டுக்குள் கொண்டுவர கடுமையான நடவடிக்கை எடுக்குமாறு, இந்திய தலைமைத் தேர்தல் ஆணையர் திரு. கியானேஷ்குமார் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார். மேற்கு வங்க மாநில தலைமைச் செயலர், காவல்துறை தலைவர் மற்றும் மத்திய ஆயுதப் படை அதிகாரிகளுக்கு அவர் பிறப்பித்துள்ள உத்தரவில், வன்முறையில் ஈடுபடுவோரை உடனடியாக கைது செய்ய வேண்டும் என்று தெரிவித்துள்ளார். மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் காவல்துறை கண்காணிப்பாளர்கள் சட்டம் ஒழுங்கை பராமரிக்க உறுதியான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும், திரு. கியானேஷ்குமார் தெரிவித்துள்ளார்.

மேற்குவங்கத்தில் தேர்தலுக்குப் பின் நடைபெற்ற வன்முறையில் 2 பேர் உயிரிழந்ததைத் தொடர்ந்து, தேர்தல் ஆணையம் இத்தகையை நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

மேற்கு வங்க சட்டமன்றத் தேர்தலில் முறைகேடு நடைபெற்றதாகக் கூறி, முதலமைச்சர் பதவியில் இருந்து விலக, செல்வி மம்தா பானர்ஜி மறுத்துள்ளது குறித்து கருத்து தெரிவித்துள்ள பிஜேபி செய்தித் தொடர்பாளர் திரு. சம்பித் பத்ரா, இந்தியா ஒரு ஜனநாயக நாடு என்றும், அது எப்போதும் மதிக்கப்பட வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார். நாட்டின் ஜனநாயகத்தின் அதிகாரப் பரிமாற்றம் என்பது எப்போதும் அமைதியான முறையில்தான் நடைபெற்றுள்ளது என்றும், செல்வி மம்தா பானர்ஜியின் கருத்துக்கள் கவலையளிப்பதாக உள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இது பிஜேபி மீதான தாக்குதல் அல்ல என்றும், மாறாக ஜனநாயகம் மற்றும் அரசியல் அமைப்புச் சட்டம் மீதான தாக்குதல் என்றும் அவர் கூறியுள்ளார். இதற்கிடையே, மத்திய கல்வியமைச்சர் திரு. தர்மேந்திர பிரதான் வெளியிட்டுள்ள சமூக ஊடகப்பதிவில், செல்வி மம்தா பானர்ஜி மக்களின் தீர்ப்பை நிராகரிப்பது மட்டுமல்லாமல், தேர்தல் ஆணையம் மற்றும் பாதுகாப்புப் படைகள் போன்றவைகளின் நம்பகத் தன்மையை சிதைக்கவும், சுதந்திரமான, நியாயமான மற்றும் பாதுகாப்பான தேர்தல்களை உறுதிசெய்யும் நடைமுறைகளை பலவீனப்படுத்தவும் முயற்சிக்கிறார் என்று குற்றம் சாட்டியுள்ளார்.

*போலி வீடியோ (12)*

கடந்த ஆண்டு மே மாதம் 10ஆம் தேதி இந்தியாவின் கணினி அமைப்புகளை பாகிஸ்தான் செயலிழக்கச் செய்ததாக மத்திய பாதுகாப்புத்துறைச் செயலர் திரு. ராஜேஷ்குமார் சிங் கூறுவது போன்ற சமூக ஊடகங்களில் பரவிவரும் வீடியோ போலியானது என்று பத்திரிக்கை தகவல் அலுவலகத்தின் உண்மை சரிபார்க்கும் பிரிவு தெரிவித்துள்ளது. அந்த வீடியோ செயற்கை நுண்ணறிவால் உருவாக்கப்பட்டு தவறான தகவல்களை பரப்பும் நோக்கத்தில் பாகிஸ்தானிய குழுக்களால் அது பரப்பப்பட்டு வருவதாகவும், பத்திரிக்கை தகவல் அலுவலகம் தெரிவித்துள்ளது. இதுபோன்ற போலி வீடியோக்களை நம்பவேண்டாம் என்றும், Factcheck@pib.gov.in என்ற மின்னஞ்சல் முகவரியில் இதுபோன்ற வீடியோக்கள் குறித்த புகார்களை பதிவு செய்து, அதன் உண்மை தன்மையை தெரிந்து கொள்ளலாம் என்றும் பத்திரிக்கை தகவல் அலுவலகம் அறிவித்துள்ளது.

*விஜய் சந்திப்பு (8)*

தமிழகத்தில் புதிய அரசு அமைப்பதற்காக தவெக தலைவர் திரு. விஜய், ஆளுநர் திரு. R.V. அர்லேகரை சந்தித்து உரிமை கோரினார். இன்று பிற்பகல் மக்கள் மாளிகைக்கு சென்று அதற்கான கடிதத்தை

ஆளுநரிடம் வழங்கினார். ஆட்சியமைக்க 118 உறுப்பினர்களின் ஆதரவு தேவை என்ற நிலையில், தற்போது தவெக 108, காங்கிரஸ் 5 என மொத்தம் 113 உறுப்பினர்களின் ஆதரவு உள்ளது. மேலும் 6 உறுப்பினர்களின் ஆதரவைத் திரட்டும் வகையில், வேறுசில கட்சிகளுடன் தவெக சார்பில் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

***தவெக – காங்கிரஸ் -1 (3)***

தமிழகத்தில் தவெக தலைமையில் புதிய அரசு அமைய காங்கிரஸ் நிபந்தனையற்ற ஆதரவு வழங்கும் என்று தமிழ்நாட்டிற்கான காங்கிரஸ் மேலிட பொறுப்பாளர் திரு. கிரீஷ் சோடங்கர் தெரிவித்துள்ளார். இது குறித்த ஒரு செய்தித் தொகுப்பு...

***தவெக – காங்கிரஸ் - 2 (12)***

சென்னை, சத்தியமூர்த்தி பவனில் இன்று நடைபெற்ற காங்கிரஸ் கட்சியின் புதிய சட்டப் பேரவை உறுப்பினர்களின் கூட்டத்திற்குப் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், புதிய அரசு அமைக்க தவெக-விற்கு ஆதரவு அளிக்குமாறு திரு. விஜய் கேட்டுக் கொண்டதாகக் கூறினார்.

அரசியல் சாசனத்தில் நம்பிக்கை இல்லாத மதவாத கட்சிகளுடனான கூட்டணியில் இருந்து தவெக விலகி இருக்க வேண்டும் என்ற

அடிப்படையில் இந்த ஆதரவு வழங்கப்படுவதாகவும் திரு. சோடங்கர் தெரிவித்தார். பரஸ்பர மரியாதையின் அடிப்படையில் ஏற்பட்டுள்ள இந்தக் கூட்டணி உள்ளாட்சி மற்றும் நாடாளுமன்றத் தேர்தல்களிலும் தொடரும் என்றும் அவர் கூறினார்.

இதற்கிடையே, இதுகுறித்து கருத்துத் தெரிவித்துள்ள திமுகவின் செய்தித் தொடர்பாளர் திருமதி. கனிமொழி, காங்கிரஸின் இந்நடவடிக்கை நம்பிக்கை துரோகம் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

***குடிமைப் பொருள் வழங்கல் துறை (16)***

புதுச்சேரியில் பிரதான் மந்திரி கரீஃப் கல்யாண் அன்ன யோஜனா திட்டத்தின் கீழ், சிவப்பு அட்டைதாரர்களுக்கு வழங்கப்படும் டிஜிட்டல் கரன்சியை பெறுவதற்கு E-Kyc-யை புதுப்பிக்க வேண்டியது அவசியம் என்று, குடிமைப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் விவகாரங்கள் துறை சார்பில் அறிவிக்கப்பட்டுள்ளது. பயனாளிகளின் வங்கிக் கணக்கிற்கு நேரடியாக பணம் செலுத்தப்பட்ட முறைக்கு பதிலாக இந்த ஆண்டு பிப்ரவரி மாதம் 26ஆம் தேதி டிஜிட்டல் கரன்சி அறிமுகப்படுத்தப்பட்டது என்றும், இது ஒருவரது வங்கிக் கணக்கில் வரவு வைத்த பிறகு 3 மாதங்களுக்கு மட்டுமே செல்லுபடியாகும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த டிஜிட்டல் கரன்சியை பெறுவதற்கு E-Kyc-யை புதுப்பிக்க வேண்டும் என்றும், அப்படி செய்யாதவர்கள், ரேசன்

கார்டு மற்றும் ஆதார் அட்டையுடன் பொது சேவை மையங்களுக்குச் சென்று, கட்டணம் ஏதுமின்றி புதுப்பித்துக் கொள்ளலாம் எனவும், அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும், இதற்காக புதுச்சேரி குடிமைப் பொருள் வழங்கல் துறை சார்பில் விரைவில் அனைத்து தொகுதிகளிலும் சிறப்பு முகாம்கள் நடத்த திட்டமிட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

***காரைக்கால் (8)***

காரைக்கால் அரசு பொது மருத்துவமனையில் வரும் 8ஆம் தேதி சிறப்பு மருத்துவ முகாம் நடைபெற உள்ளதாக, அம்மருத்துவமனையின் மருத்துவ கண்காணிப்பாளர் தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், புதுச்சேரி இந்திராகாந்தி அரசு பொதுமருத்துவமனையைச் சேர்ந்த மனநலம், குழந்தைகள் அறுவை சிகிச்சை, இருதயம், நரம்பியல் உள்ளிட்ட சிறப்பு பிரிவுகளைச் சேர்ந்த மருத்துவர்கள் சிகிச்சை அளிக்க உள்ளதாகவும், இந்த வாய்ப்பை காரைக்கால் பொதுமக்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

***குற்றப்பத்திரிக்கை -1 (18)***

பொது இடங்களில் உயிரியல் நச்சுக்களை பயன்படுத்தி பெறும் உயிரிழப்புகளை ஏற்படுத்தும் ISIS பயங்கரவாத அமைப்பின் சதித்

திட்டத்தில் தொடர்புடையதாக ஒரு மருத்துவர் உட்பட 3 பேர்மீது, தேசிய புலனாய்வு முகமை குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளது.

குஜராத் மாநிலம் அகமதாபாத்தில் உள்ள சிறப்பு NIA நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த குற்றப்பத்திரிக்கையில் ஹைதராபாத்தைச் சேர்ந்த டாக்டர் சையது அகமது மொஹியுதீன் உத்தரப்பிரதேசத்தைச் சேர்ந்த ஆசாத் மற்றும் முகமது சுஹேல் ஆகியோரின் பெயர்கள் இதில் இடம் பெற்றுள்ளன.

இது தொடர்பாக தேசிய புலனாய்வு முகமை மேற்கொண்ட விசாரணையில், வெளிநாடுகளில் உள்ள ISIS தீவிரவாதிகளின் வழிகாட்டுதலின்படி, இந்த மூவரும் ஒருங்கிணைந்து செயல்பட்டது தெரியவந்துள்ளது. மேலும், சமூக வலைதளங்கள் மூலம் இளைஞர்களை மூளைச் சலவை செய்து, அவர்களின் மூலம், தடை செய்யப்பட்ட ஆயுதங்கள் மற்றும் உயிரியல் நச்சுக்களை பயன்படுத்தி பீதியை ஏற்படுத்துவதுமே இவர்களின் நோக்கமாக இருந்துள்ளது.

ஆமணக்கு விதைகளில் இருந்து பிரித்தெடுக்கப்படும் ரைசின் என்ற அதி பயங்கர நச்சுப்பொருளை பயன்படுத்தி தாக்குதல் நடத்த இவர்கள் திட்டமிட்டுள்ளது விசாரணையில் தெரியவந்துள்ளது.

***குற்றப்பத்திரிக்கை – 2 (4)***

சீனாவில் மருத்துவப் படிப்பு முடித்த டாக்டர் மொஹியுதீன் கடந்த 2025ஆம் ஆண்டு குஜராத்தில் ஒரு சோதனைச் சாவடியில் பிடிபட்டார். அப்போது அவரது காரை பரிசோதித்த காவல்துறையினர், 4 லிட்டர் ஆமணக்கு எண்ணெய், சட்டவிரோத பொருட்கள் மற்றும் ஆவணங்களை கைப்பற்றினர்.

***சாகச நடனம் (9)***

உலக சாகச நடனங்கள் மற்றும் நடன விளையாட்டு கூட்டமைப்பானது நடப்பு ஆண்டிற்கான ஆசிய சாம்பியன்ஷிப் கோப்பைக்கான போட்டியை இந்தியாவில் நடத்த உள்ளது. இதற்கான தேர்வு மற்றும் பயிற்சி முகாம் வரும் வெள்ளிக்கிழமை புதுடெல்லியில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த முகாமில் மகாராஷ்டிரா, ஜார்க்கண்ட், ராஜஸ்தான், ஹரியானா மற்றும் பஞ்சாப் உள்ளிட்ட நாட்டின் பல்வேறு மாநிலங்களில் இருந்து 120 விளையாட்டு வீரர்கள் பங்கேற்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்தியாவில் சாகச நடன விளையாட்டுக்கான ஒரு வலுவான சூழலை உருவாக்குவதே இந்த நிகழ்வின் நோக்கமாக உள்ளது.

*கிரிக்கெட் (4)*

ஐபிஎல் கிரிக்கெட் போட்டித் தொடரில் இன்றிரவு 7.30 மணிக்கு தொடங்கும் ஆட்டத்தில் பஞ்சாப் கிங்ஸ் அணியும் – ஹைதராபாத் சன் ரைசர்ஸ் அணியும் விளையாடுகின்றன. ஹைதராபாத்தில் உள்ள ராஜீவ் காந்தி சர்வதேச விளையாட்டு அரங்கில் இந்தப் போட்டி நடைபெறுகிறது.

*வானிலை (7)*

தமிழகத்தின் ஒருசில இடங்களிலும், புதுச்சேரி மற்றும் காரைக்காலிலும், அடுத்த 5 நாட்களுக்கு இடி, மின்னலுடன் கூடிய மிதமான மழை பெய்ய வாய்ப்பிருப்பதாக, சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. மேலும், தமிழகம், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் அடுத்த 3 நாட்களுக்கு அதிகபட்ச வெப்பநிலை ஓரிரு இடங்களில் 2 முதல் 3 டிகிரி செல்சியஸ் வரை படிப்படியாக குறையக்கூடும் என்றும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

பிரதமர் திரு. நரேந்திர மோடி, வியட்நாம் அதிபர் திரு. டோ லாமுடன் பேச்சுவார்த்தை நடத்தினார். அப்போது பல்வேறு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின.

உச்சநீதிமன்ற நீதிபதிகளின் எண்ணிக்கையை உயர்த்த மத்திய அமைச்சரவை மேற்கொண்ட முடிவானது, நீதித்துறையின் கட்டமைப்பை வலுப்படுத்தி இருப்பதாக, பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

தமிழகத்தில் புதிய அரசு அமைப்பதற்காக தவெக தலைவர் திரு. விஜய், ஆளுநர் திரு. R.V. அர்லேகரை சந்தித்து உரிமை கோரினார்.

புதுச்சேரியில், சிவப்பு அட்டைதாரர்கள் டிஜிட்டல் கரன்சியை பெறுவதற்கு E-Kyc-யை புதுப்பிக்க வேண்டியது அவசியம் என்று, குடிமைப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் விவகாரங்கள் துறை தெரிவித்துள்ளது.

**இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது.**